# விம்கோ நகருக்கு மெட்ரோ டீசல் இன்ஜின் சோதனை

சென்னை, டிச. 27–

வண்ணாரப்பேட்டை – விம்கோ நகர் இடையே, மெட்ரோ ரயில் பாதையில், நேற்று டீசல் இன்ஜின் இயக்கி சோதனை நடத்தப்பட்டது.

வண்ணாரப்பேட்டை – திருவொற்றியூர் விம்கோ நகர் இடையே, 9.1 கி.மீ., மெட்ரோ ரயில் பாதை அமைக்கப்பட்டுள்ளது. பாதை மற்றும், நிலையங்களில், மின்சார பணி முடிந்துள்ளது.

பயணியருக்கான அத்தியாவசிய கட்டுமான பணிகளை விரைவாக முடித்து, இப்பாதையில் ரயில் இயக்க, அதிகாரிகள் ஆர்வத்துடன் செயல்பட்டு வருகின்றனர்.

கடந்த, 24ம் தேதி இரவு, அதிகாரிகளால், மின்மயமாக்கும் பணிகள் உட்பட அனைத்து பணிகளும் தேவையான அளவு முடிக்கப்பட்டுள்ளதா என, ஆய்வு நடத்தப்பட்டது.

மின் இணைப்பு தொடர்புகள் உட்பட, அனைத்து கருவிகளும் இயக்கி பார்த்து, சோதனை நடத்தப்பட்டது.

இதனையொட்டி, திட்ட இயக்க பிரிவு அதிகாரிகளால், நேற்று, வண்ணாரப்பேட்டை – விம்கோ நகர் இடையே, டீசன் இன்ஜின் இயக்கி சோதனை நடத்தப்பட்டது.

இப்பாதையில், எட்டு நிலையங்களின் நிறைவடைந்த பணிகள் குறித்து ஆய்வு செய்யப்பட்டது.

தண்டவாளத்தின் நிலை, சிக்னல் தொடர்புகள் பாதுகாப்பு மற்றும் காற்று கட்டுப்பாட்டு கருவிகள், தானியங்கி டிக்கெட் கட்டண இயந்திரம் உட்பட அனைத்து இயந்திரங்களையும் இயக்கி, சோதனை செய்யப்பட்டது.

சோதனை வெற்றிகரமாக முடிந்ததையொட்டி, வண்ணாரப்பேட்டை – விம்கோ நகர் இடையே, இன்று காலை, 10:00 மணிக்கு மெட்ரோ ரயில் இயக்கி சோதனை நடத்தப்பட உள்ளது.

ஜன., 2வது வாரம் வரை, தொடர்ந்து மெட்ரோ ரயில் சோதனை ஓட்டம் நடத்தப்படும். அதன் பின், ரயில்வே பாதுகாப்பு கமிஷனர், இப்பாதையில் விரைவு ரயில் இயக்கி சோதனை நடத்த உள்ளார்.

அதனை தொடர்ந்து, ஜன., இறுதியில், வண்ணாரப்பேட்டை–விம்கோநகர் இடையே, பயணியர் ரயில் போக்குவரத்து துவங்கப்பட உள்ளது.